# January 7, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 'உங்கள் கனவைச் சொல்லுங்கள்' என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜன. 9-ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளார்.

(i) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

(ii) அவர் மேலும் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்குள்ள கனவுகளையும், மாநில வளர்ச்சி தொடர்பான கனவுகளையும் வெளிப்படுத்தும் வகையில் 'உங்கள் கனவைச் சொல்லுங்கள்' திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இதன்மூலம் 91 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும்.

(iii) சுமார் 50,000 தன்னார்வலர்கள் இந்தத் திட்டத்தில் இடம்பெறுவார்கள். இவர்கள் ஒவ்வொரு குடும்பத்தினரையும் நேரடியாகச் சந்தித்து, அரசின் திட்டங்களால் அந்தக் குடும்பம் பெறும் பயன்கள் மற்றும் அடுத்ததாக அந்தக் குடும்பத்தின் கனவுகள் என்ன என்பதைக் கேட்டுப் பதிவு செய்வார்கள்.

(iv) அந்த விண்ணப்பம் செயலியில் பதிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனிப்பட்ட அடையாள எண் உருவாக்கப் பட்டு 'கனவு அட்டை' வழங்கப்படும்.

(v) இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்ற தனி இணையதளம் உருவாக்கப்படும். வெளிநாடு வாழ் தமிழர்களின் கருத்துகளும் பெறப்படும். மாவட்டம் வாரியாக ஒரு மாதம் பெறப்படும் இந்தத் தகவல்கள் ஒன்றிணைக்கப்பட்டு, 2030-ஆம் ஆண்டை இலக்காக வைத்து கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும்.

(vi) தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள இந்தத் திட்டத்தை ஜன. 9-ஆம் தேதி திருவள்ளூர் பொன்னேரியில் மாவட்டம், முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார் என்றார்.

2. புதிய தர நிர்ணயங்களை இந்திய தர நிர்ணய ஆணையம் (பிஐஎஸ்) விரைவில் உருவாக்குவதோடு பொருள்களின் தரத்தை பரிசோதிக்கும் ஆய்வகங்களை நவீனப் படுத்த வேண்டும் என மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

(i) பிஐஎஸ்ஸின் 79-ஆவது நிறுவன தின நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசியதாவது: வேளாண்மை, உற்பத்தி, தொழில்நுட்பம் என பல துறைகளிலும் பிஐஎஸ் முத்திரை நம்பிக்கையின் அடையாளமாகத் திகழ்கிறது. 1947 முதல் பொருள்களின் தரத்தை மதிப்பிடுவதில் ஈடுஇணையற்ற அமைப்பாக பிஐஎஸ் செயல்பட்டு வருகிறது.

(ii) 2016-ஆம் ஆண்டில் புதிதாக பிஐஎஸ் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் பிஐஎஸ் அமைப்பை இந்திய தேசிய தர நிர்ணய அமைப்பாக மாற்றியது. இதில் மேலும் பல்வேறு துறைகள் சேர்க்கப்பட்டு பெரும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

(iii) புதிய தர நிர்ணயங்களை பிஐஎஸ் விரைவில் உருவாக்குவதோடு பொருள்களின் தரத்தை பரிசோதிக்கும் ஆய்வகங்களை நவீனப்படுத்த வேண்டும் என்றார்.

(iv) தற்போது 23,700 இந்திய தர நிர்ணயங்கள் அமலில் உள்ளன. இதில் 94 சதவீதம் சர்வதேச தரத்துக்கு (ஐஎஸ்ஓ/ ஐஇசி) நிகரானது என்பது குறிப்பிடத்தக்கது.

3. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி தமிழகத்திற்கு ஜனவரியில் 2.76 டிஎம்சி தண்ணீர் திறந்து விட வேண்டும் என கர்நாடகத்துக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தர விட்டுள்ளது.

(i) காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 47-ஆவது கூட்டம் தில்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழகம், கர்நாடகம், கேரளம் மற்றும் புதுச்சேரி அரசுகளின் பிரதிநிதிகள் காணொலி வாயிலாக கலந்து கொண்டனர்.

(ii) மாநிலங்களின் கருத்துகளைக் கேட்ட ஆணையம், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு ஜனவரியில் 2.76 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என கர்நாடகத்துக்கு உத்தரவிட்டது.

4. 01.04.2003-க்குப் பிறகு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான தமிழ்நாடு உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கு (TAPS) தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5. 18 நாடுகளின் அணிகள் பங்கேற்கும் யுனைடெட் கோப்பை போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. ஆஸி. ஓபன் போட்டிக்கு தயாராகும் வகையில் இப்போட்டி நடைபெறுகிறது.

6. உக்ரைன் போர் தொடங்கியதிலிருந்து தள்ளுபடி விலையில் கிடைத்த ரஷிய கச்சா எண்ணெய்யை சுமார் 14,388 கோடி யூரோவிற்கு (இந்திய மதிப்பில் சுமார் ரூ.15.17 லட்சம் கோடி) இந்தியா இறக்குமதி செய்துள்ளதாக ஐரோப்பிய ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

(i) ஐரோப்பிய எரிசக்தி மற்றும் தூய்மை காற்றுக்கான ஆராய்ச்சி மையம் (சிஆர்இஏ) வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி,ரஷிய எண்ணெய் வாங்குவதில் சர்வதேச அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

(ii) உக்ரைன் மீதான முழு அளவிலான தாக்குதலை ரஷியா கடந்த 2022-ஆம் ஆண்டு, பிப்ரவரியில் தொடங்கியது. அப்போது முதல் கடந்த ஜன. 3-ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில், ரஷியாவிடமிருந்து சீனா மொத்தம் 29,370 கோடி யூரோ மதிப்பிலான எரிபொருள்களை வாங்கியுள்ளது. இதில் கச்சா எண்ணெய் கொள்முதல் மதிப்பு மட்டும் 21,030 கோடி யூரோ ஆகும்.

(iii) இந்தியா மொத்தம் 16,250 கோடி யூரோ மதிப்பிலான எரி பொருளை கொள்முதல் செய்துள்ளது. இதில் கச்சா எண்ணெய் 14,388 கோடி யூரோவிற்கும், நிலக்கரி 1,818 கோடி யூரோ விற்கும் வாங்கப்பட்டுள்ளன.

(iv) பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும், ஐரோப்பிய யூனியன் 21,810 கோடி யூரோவை ரஷிய எரிபொருளுக்காகச் செலவிட்டுள்ளது. 10,630 கோடி யூரோவிற்கு கச்சா எண்ணெயும், 350 கோடி யூரோவிற்கு நிலக்கரியும், 10,820 கோடி யூரோவிற்கு எரிவாயும் வாங்கப்பட்டுள்ளன என்று சிஆர்இஏ தெரிவித்துள்ளது.

(v) இந்தக் காலகட்டத்தில் எரி பொருள் விற்பனையில் ரஷியா 1 லட்சம் கோடி யூரோ

(சுமார் ரூ.105 லட்சம் கோடி) வருவாய் ஈட்டியுள்ளது. இதில் பெரும் பகுதி உக்ரைனில் நடைபெற்று வரும் போருக்குச் செலவிட பயன்படுத்தப்படுவதாக அந்த மையம் கவலை தெரிவித்துள்ளது.

(vi) சரியும் இறக்குமதி: உக்ரைன் போரைத் தொடர்ந்து, மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக ரஷியா தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் வழங்கியது. இதனால், இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷியாவின் பங்கு 1 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை உயர்ந்தது.

(vii) இருப்பினும், ரஷியாவின் 2 முன்னணி எண்ணெய் நிறுவனங்கள் மீது அமெரிக்கா விதித்த புதிய கட்டுப்பாடுகள் அண்மையில் அமலுக்கு வந்தததன் காரணமாக இந்தியாவின் இறக்குமதி குறையத் தொடங்கியது.

(viii) இதன் விளைவாக, ரிலையன்ஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் ரஷிய எண்ணெய்யைத் தவிர்த்து வருவதால், தற்போதைய பங்கு 25 சதவீதத்துக்கும் கீழாகக் குறைந்துள்ளது. குறிப்பாக, ரஷிய எண்ணெய்யைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை ரிலையன்ஸ் நிறுவனம் நிறுத்திவிட்டதாக அறிவித்துள்ளது.

(ix) அதேநேரம், இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் அமெரிக்க தடைக்கு உள்ளாகாத ரஷிய நிறுவனங்களிடமிருந்து தொடர்ந்து எண்ணெய் வாங்கி வருகின்றன.

7. பல்வேறு சமயங்களில் இந்திய மொழிகளை அழிப்பதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் காலங்களைக் கடந்து நமது மொழிகள் கம்பீரமாக நிலைத்து நிற்கின்றன என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

(i) தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ் உள்பட இந்திய செம்மொழிகளில் 55 நூல்கள், சைகை மொழியில் 45 பாக திருக்குறள் விளக்கவுரை ஆகியவற்றை தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்.

(ii) இதில் 41 நூல்கள் கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய மொழிகளுக்கான சிறப்பு நிறுவனங்களால் உருவாக்கப்பட்டவை. திருக்குறள் விளக்கவுரை மற்றும் 13 நூல்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் தொகுக்கப்பட்டது.

8. காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத் திய அமைச்சருமான சுரேஷ் கல்மாடி (81) செவ்வாய்க்கி ழமை காலமானார்.

(i) கடந்த 1944-ஆம் ஆண்டு சென்னையில் பிறந்த சுரேஷ் கல்மாடி, புணேயில் உள்ள ஃபெர்குசன் கல்லூரியில் படித்தார். தேசிய பாதுகாப்பு அகாதெமியில் பயின்று இந்திய விமானப்படை விமானியாக இருந்த அவர், 1971-ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரில் பங்கேற்றார்.

(ii)கடந்த 1982-ஆம் ஆண்டு நாடாளுமன்ற எம்.பி.யான அவர், 3 முறை மக்களவை எம்.பி.யாகவும் 4 முறை மாநிலங்களவை எம்.பி.யாகவும் பதவி வகித்தார்.

(iii) பிரதரமாக பி.வி.ந ரசிம்மராவ் ஆட்சி' காலத்தில் ரயில்வே துறை

இணையமைச்சராக 1995 முதல் 1996-ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார். அவர்தான் ரயில்வே பட்ஜெட்டை தாக்கல் செய்த ஒரே ரயில்வே இணையமைச்சர். புணேயை முக்கிய தகவல் தொழில்நுட்ப, தொழில் துறை மற்றும் விளையாட்டு மையமாக மாற்றியதில் முக்கியப் பங்காற்றினார்.

(iv) கடந்த 1996 முதல் 2011-ஆம் ஆண்டு வரை, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராக அவர் பதவி வகித்தார்.